## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை – 2016

---

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உற்றவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும், அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனதுகணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர்கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளின் மூலம் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**02. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம்**

கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தவிர சொத்துக்களையும் பொறுப்புக்களையும் மற்றும் வருமானங்களையும் செலவுகளையும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யமுடியாது என்ற போதிலும் நிதி நிலைமைக்கூற்றின் ஒரு விடயமான முற்பண மீதிக்கு சொத்துக்களை அகற்றுதல் கணக்கின் செலவு மீதி எதிரீடு செய்யபட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு தொடர்பாக அறவிடப்பட்ட பணம் அண்ணளவாக ரூபா 2,100,000 என நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அத்தரப்பினர்கள் மற்றும் அத்தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய பணம் தொடர்பான விபரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

சபையின் இணைய தளத்தை அபிவிருத்தி செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 5,128,000 பணம் கட்புலனற்ற ஒரு சொத்தாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

இன்டசூ கண்காட்சிக்காக பங்குபற்றிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட கட்டணங்கள் பேரேட்டின் பிரகாரம் ரூபா 1,783,025 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,708,051 ஆக இருந்தமையால் ரூபா 74,974 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சன்றுகள் |
|---|---|---|---|
| (அ) | மிகையூதியம் | 2,623,013 | திறைசேரியின் அங்கீகாரம் மற்றும் கணிப்பீடு தொடர்பான விபரம். |
| (ஆ) | பெறவேண்டிய மீதி | 157,757,770 | பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும் |
| (இ) | அட்டுறு செலவுகள் | 28,445,924 | பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும் |
| (ஈ) | ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 41,053,000 | பணிப்பாளர் சபைத் தீர்மானம் ஏற்றுமதியாளர்களைத் தெரிவு செய்தல் நடைமுறை மீளளிப்புச் செய்யப்பட்ட செலவுகளின் பட்டியலும் கோவைகளும் |
| (உ) | வெளிநாட்டு பிரயானச் செலவுகள் | 667,985 | படிகள் கணிப்பீடு செய்தமையின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான விமான டிக்கட்டுக்களும்<br>வெளிநாட்டுப் பயண உத்தரவுப் பத்திரங்களும். |

## 2.3 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

தும்பு சார்ந்த உற்பத்தி பொருட்களின் பெறுமதியை அதிகரிப்பதற்காக சலுகை வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சபையினால் ஒரு தனியார் கம்பனியுடன் 2014 யூலை 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் அத்திகதியின் பின்னர் ரூபா 450,648 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்கிய ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 16 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவு. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குமான பங்களிப்புக்களை கணிப்பீடு செய்யும் போது விசேட படிகள் தொழில்சார் படிகள், இடைக்காலப்படிகள், அங்கீகரிக்கப்படாத விசேட வாழ்கைச் செலவுப் படிகள் என்பவற்றை உள்ளடக்குதல் மற்றும் வாழ்கைச் செலவு படிகளை உள்ளடக்காததன் அடிப்படையில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 5,508,199 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 659,375 தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | விமானம் மூலம் செய்யப்படுகின்ற அணைத்துப் பயணங்களும் சிக்கன வகுப்பை பயன்படுத்தி செய்யவேண்டிய போதிலும் சபையின் தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளரால் வர்த்தக வகுப்பிற்கான விமான டிக்கட்டுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 103(1) (ஆ) மற்றும் 104(1) | 2016 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற 03 விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை | |
| | i 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க மற்றும் 2007 யூன் 12 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை. | 2005 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து வங்கி மூலம் ஆதனக்கடன் வழங்கப்பட வேண்டிய போதிலும் சபை அரசாங்க மானியத்தை பயன்படுத்தி சபையினாலேயே கடனை வழங்கியிருந்தது. மேலும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைக் கவனத்தில் கொள்ளாது மொத்த கடன் பணத்திற்காக 4.2 சதவீதமான வட்டி அறவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| ii | 2007 செப்தெம்பர் 11 ஆந் திகதி 21/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டுப் பயணத்திற்காக பங்குபற்றும் போது பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பிரதம மந்திரியின் அங்கீகாரம் வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளுக்காகப் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்காகப் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதியாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த ஆண்டிற்காக மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு முடிவுறுத்தபட வேண்டியதுடன் அடுத்துவரும் ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதியளவில் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 யூன் 28 ஆந் திகதி வரை 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கை இடம் பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ /12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.6 ஆம் பந்தி | ஒரு காலண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் வரிசை அமைச்சுக்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் காலாண்டு ரீதியான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப் /பீஈ 5 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | சபையில் 25 ஆண்டுகள் சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு தங்கப் பவுண்களை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 478,002 செலவு செய்யப்பட்டிருந்தும் தனது ஊழியர்களுக்கு நலன்களை கொடுப்பனவு செய்வதற்காக திறைசேரி நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தும் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 45,773,906 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 70,144,039 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 24,370,133 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 98,319,963 ஆல் குறைவடைதல் மேற்கூறிய நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டிற்கும் முன்னைய 04 ஆண்டுக்குமான நிதிசார் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் தேறிய நட்டமும் 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக தேறிய இலாபமும் ஏற்பட்டிருந்ததுடன் அது வருடாந்தம் உயர்வடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை, அரசாங்க வரி, நடைமுறையற்ற கொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 154,726,961 தொகையான பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 287,157,318 வரை அதாவது 85 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. எனினும் அதற்கு பின்னைய ஆண்டுகளில் அது குறைந்த அளவில் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பங்களிப்பு ரூபா 238,522,796 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------

சபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் குறிக்கோள் பின்வருமாறாகும்.

(i) மகிந்த சிந்தனை – தூர நோக்கில் எதிர்பாத்த பொருளாதார அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலர் 20 பில்லியன் வரை அதிகரித்தல்.

(ii) ஐரோப்பிய சங்கம் மற்றும் அமெரிக்க ஐக்கிய குடியரசு சந்தைகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற இலங்கையின் ஏற்றுமதியை நிரந்தரமாக பேணுகின்ற அதேவேளை ஏனைய வெளிநாட்டு சந்தைகளுக்குச் செய்யப்படுகின்ற ஏற்றுமதி, ஒட்டுமொத்த ஏற்றுமதி உழைப்பில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் உயர்வடையச் செய்தல்.

(iii) இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்திற்கு 80 சதவீதம் அளவில் பங்களிப்பு செய்கின்ற இனங்காணப்பட்ட ஏழு முன்னணி பொருட்கள் தொர்பாக விசேட கவனம் செலுத்தி அவற்றின் ஏற்றுமதி வருமானத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தல்.

(iv) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல் நிகழ்ச்சிதிட்டங்களின் மூலம் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக சிறப்பான எண்ணக்கருவை சர்வதேச ரீதியில் உருவாக்குதல்.

(v) ஏற்றுமதி வர்த்தகத்தின் நலன்களை அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களுக்கும் செல்லக்கூடிய வகையில் திட்டமிடுதல்.

(vi) ஊழியர் விளைதிறன் மற்றும் அர்பனிப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தி நிறுவனத்தின் தொடக்க பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நியமிக்கப்பட்ட விசேட குழுவை சபையில் உருவாக்குதல்.

மேற்கூறிய குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயலாற்றல் அறிக்கையில் ஒவ்வெரு செயல் நடவடிக்கைகளுக்குரிய பௌதீக செயல் முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஆனால் ஆண்டின் போது அமுல்படுத்தப்படாத 8 செலவுத் தலைப்புக்களின் கீழ் 11 நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பணம் ரூபா 28,650,000 ஆகும். நிகழ்ச்சித்திட்டங்களின் சாத்திய வளம் தொடர்பான முன் அறிவுடன் நடவடிக்கை எடுக்காமை நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமாக நிறுவனம் மற்றும் தனி நபர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல் நடாத்தப்படாமை மற்றும் தெரியப்படுத்தாமை என்பன இந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தாமைக்கு தாக்கமளித்த பிரதான காரணங்களாகும்.

(இ) மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ஏற்றுமதி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஏற்றுமதியாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்காக பத்திரிகை விளம்பரங்களை வெளியிடும் போது ஆங்கிலப் பத்திரிகைகளில் மாத்திரம் வெளியிடப்பட்டதன் காரணமாக பல ஏற்றுமதியாளர்களுக்கு அக்கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) ஏற்றுமதியாளர்களை தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குழு முறைப்படியாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏற்றுமதியாளர்களைத் தெரிவு செய்யும் போது புள்ளிகள் வழங்கும் திட்டமும் எல்லைகளும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தும் சில ஏற்றுமதியாளர்களுக்கு புள்ளிகள் வழங்குவதற்கான அடிப்படை காணப்படவில்லை. எனவே ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(iv) அதிக ஏற்றுமதி வருமானங்களை உழைக்கும் நிதி சிக்கலற்ற கம்பனிகளுக்கு அதிக புள்ளிகள் வழங்கி அரசாங்கத்தின் மூலம் நிதி உதவி வழங்கியிருத்தல் மற்றும் குறைந்த ஏற்றுமதி வருமானங்களை உழைக்கும் கம்பனிகளுக்கு குறைந்த புள்ளி வழங்குதல் என்பவற்றின் காரணமாக ஏற்றுமதிகளை மேம்படுத்தும் நடவடிக்கையானது முறைப்படியாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) வெளிநாட்டு பங்குகளை வைத்திருக்கும் கம்பனிகளுக்காக வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம் வழங்கியதன் காரணமாக உள்நாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(vi) வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளில் வர்த்தக கூடங்களை நிர்மாணித்தல் மற்றும் இடவசதிகளை ஒதுக்கீடு செய்தல் கிரயத்திற்காக சபையின் பங்களிப்பு சம்பந்தமாக ஒருமித்த கொள்கை காணப்படவில்லை.

(vii) வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளுக்காக பங்குபற்றும் போது சபை ஏற்றுமதியாளர்களுடன் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் உள்ளடக்கப்பட்டிருந்த உடன்படிக்கைகள் குறைபாடுகளைக் கொண்டிருந்ததனால் செல்லுபடியாகும் தன்மை இல்லாதிருந்தது எனவே உடன்படிக்கை முறிவடையும் சந்தர்ப்பம் ஏற்படுகையில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பம் இல்லாதிருந்தது.

(viii) வெளிநாட்டு வர்த்தக கண்காட்சிகளுக்காக ஏற்றுமதியாளர்களைப் பங்குபற்ற செய்யும் குறிக்கோள் அடைந்து கொள்ளப்பட்டதா என்பதுவும் ஏற்றுமதி செயல் முன்னேற்றம் சம்பந்தமாக சபை பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியணியினர்களை ஆட்சேர்த்துக் கொள்ளல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பத்திரிகை விளம்பரங்களை வெளியிடும் போது உரிய தகவல்களை உள்ளடக்காமை மற்றும் கால ஒழுங்கின்படி நடவடிக்கை எடுக்காமை என்பவற்றின் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களில் ஒரே விடயத்திற்காக இரண்டு பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதில் முதலாவது பத்திரிகை விளம்பரத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 698,140 தொகை சிக்கனமற்ற செலவாக இருந்தது.

(ஆ) 35 தனியார் கம்பனிகள் சாதாரண பங்குகளில் மேற்கொண்ட முதலீடு ரூபா 58,312,484 தொகை மற்றும் 30 தனியார் கம்பனிகள் முன்னுரிமைப் பங்குகளில் மேற்கொண்ட முதலீடு ரூபா 105,058,084 தொகை மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் கம்பனிகள் பெயர்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாதிருந்த கம்பனிகள் கம்பனிகள் பெயர்ப் பதிவேட்டிலிருந்து பெயர்கள் நீக்கப்பட்டுள்ள கம்பனிகள், கலைக்கப்பட்டுள்ள கம்பனிகள் என்பனவும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கால ஒழுங்கில் முதலீடுகளை மீளாய்வு செய்யக்கூடிய வகையில் மூலதன நட்டங்களைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், முதலீடுகளுக்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரை ஒரே பெறுமதியான ரூபா 122,822,417 தொகை பாதகமான நிதி ஏற்பாடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடானது மீளாய்வாண்டிற்கு உட்படுத்தப்பட்டு பாதகமான நிதி ஏற்பாட்டிற்காகச் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட வருடாந்தப் பாதீட்டில் உள்ளடக்கப்படாத அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஆண்டின் போது ரூபா 17,983,900 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் 02 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக்கணக்காய்வு ஐய வினாக்களில் முகாமைத்துவத்திற்கு சுட்டிக்காட்டப்பட்ட அமுல்படுத்தவேண்டிய சிபார்சுகளை சபை அமுல்படுத்தியுள்ளது என்பதனை பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு அறிவித்திருக்கவில்லை.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஏற்றுதியாளர்களைத் தெரிவு செய்வதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு குழுக்களுமே ஒரே நடவடிக்கையினை மேற்கொண்டிருந்ததனால் இரண்டாவது குழுவுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 265,000 பணம் விளைவற்றதாக இருந்தது.

## 4.4 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கருவா உற்பத்தியின் பெறுமதி சேர்க்கும் இணக்கப்பாட்டை உயர்த்துதல் மற்றும் விளைதிறன் இயலுமையையும் போட்டித்தன்மையையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு பிரேரணையின் மூலம் இலங்கை ஏற்றுமதி யபிவிருத்தி சபையினுடாகச் செலவு செய்வதற்கு ரூபா 28,500,000 தொகையான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் உரிய காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இப்பணம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. பின்னர் சபைக்கு கிடைத்த வருடாந்த நிதி ஏற்பாட்டிலிருந்து கருவா பயிற்சி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கொள்வனவு நடவடிக்கைகளை பின்பற்றாது ரூபா 26,373,010 தொகைக்கு ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தும் நிலையம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் உரிமை சபைக்கு

ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. சபைக்கும் ஒப்பந்தக்காரருக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 நவம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இந்நிலையம் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்படவேண்டிய போதிலும் 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதி வரை சபை நிலையத்தை பெறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் தற்போது வரை அக்கம்பனி கட்டணத்தை அறவிட்டு கருவா தொடர்பான பயிற்சி நெறியை நடாத்தி வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

மேலும் சபையினால் நிலையத்திற்காக செலவு செய்த பணத்தை மூலதனமாக்காது வருமானச் செலவாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக் கம்பனியின் கணக்குகளில் இச்செலவு சபையிடமிருந்து கிடைத்த மானியமாகவும் கட்டிடமானது ஒரு சொத்தாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. கருவா பயிற்சி நிலையத்தை நிர்மாணிக்கும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராகச் செயற்பட்ட சபையின் விவசாய ஏற்றுமதிப் பிரிவின் நிகழ்கால பணிப்பாளர் 2016 மே 30 ஆந் திகதியிலிருந்து Cinamon Teaining Academy (pvt) Limited இல் ஒரு பணிப்பாளராக செயற்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 24 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிபடுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஜேர்மனியில் நமைபெற்ற இன்டர் சூ கண்காட்சிக்காகப் பங்குபற்றிய ஏற்றுமதியாளர்கள் தொடர்பாக சரியாக உறுதிப்படுத்தி கொள்ளமுடியாமையின் காரணமாக பங்குபற்றாத ஏற்றுமதியாளர் ஒருவர் தொடர்பாக சபை மேற்கொண்ட மேலதிகச் செலவு ரூபா 294,621 ஆகும்.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மார்ச் மாதமளவில் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த 209 நபர்களில் 150 நபர்களுக்கு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த 59 உத்தியோகத்தர்களில் ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரம் தலைவரின் கையொப்பத்துடன் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் பிரிவுத் தலைவரால் ஒப்படைக்கப்பட்ட சில கடமை ஒப்படைப்புக்களில் கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை ஒவ்வெரு உத்தியோகத்தரின் தொழில் விபரத்தின் பிரகாரம் கடமைகள் ஒப்படைக்கபபட்டிருக்காததால் உத்தியோகத்தர் தொடர்பாக உரிய மதிப்பாய்வினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) பணிப்பாளர் (மனிதவளங்கள்), பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) மற்றும் பணிப்பாளர் (பிரதேச அபிவருத்தி) ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அடிப்படைத் தகமைகளைப் பரீட்சிப்பதற்கான குழுவினால் விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகமைகள் பரிட்சிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அறிக்கையில் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. அடிப்படைத் தகமைகளைப் பரிட்சித்த குழுவிற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் காட்டப்பட்டுள்ள தகமைகள் தொடர்பாக விளக்கம் இல்லாதிருந்தும் மற்றும் அக்குழுவிற்கு விண்ணப்பதாரர்கள் பொருத்தமானவர்களா இல்லையா என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இவ்வறிக்கையின் பிரகாரம் பொருத்தமற்ற விண்ணப்பதாரர்கள் பெருத்தமானவர்கள் எனப் பெயரிடப்பட்டிருந்தது.

(ii) இதற்காக 02 நேர்முகப் பரீட்சைக் குழுக்கள் பெயரிடப்பட்டிருந்தும் அக்குழுக்களின் அங்கத்தவர்கள் முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு நேர்முகப்பரீட்சை அறிக்கை மாத்திரம் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் ஒரு குழு செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் பொருத்தமற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பொருத்தமான விண்ணப்ப தாரர்களாகப் பெயரிடப்பட்டிருந்தது.

(iii) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பணிப்பாளர் (மனிதவளங்கள்) பதவிக்காக தகைமை பெறுவதற்கு வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டம் உரிய துறையில் பட்டப்படிப்பின்படிப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அப்பட்டப்படிப்புத் தகைமைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஒரு அரசாங்கத் திணைக்களம்/கூட்டுத்தாபனம் /சபை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ மட்டத்திலுள்ள ஒரு பதவியில் ஆகக் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் எனினும் அத்தகமைகளைப் பூர்த்திசெய்யாதிருந்த ஒரு வெளித்தரப்பினர் தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 6.1.3 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அப்பதவியிலுள்ள வெற்றிடத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

(iv) சபையின் ஏற்றக்கொள்ளக்கூடிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் பணிப்பாளர் (பிராந்திய அபிவிருத்தி) பதவிக்காக வெளிவாரி விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்புடன் 15 ஆண்டுகள் முகாமைத்துவ பதவியில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற போதிலும் அத்தகமைகளைப் பெற்றிருக்காத ஒரு விண்ணபதாரர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

(v) மேற்கூறிய இரண்டு பதவிகளுக்கான தகைமைகளின் பிரகாரம் தரப்படுத்தப்படும் போது உள்ளக விண்ணப்பதாரர்கள் தகைமைகளைப் பெற்றிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களை இப்பதவிகளில் நியமிப்பதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(vi) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்கு உள்வாரியாக ஆட்சேர்க்கப்படுவதாக இருந்தால் பட்டப்பின்படிப்புடன் உரிய துறையின் MM 1.1 தொகுதியில் முதலாம் தரத்திலுள்ள ஒரு பதவியில் 5 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான அனுபவத்தைக் கொண்டிருக்காத சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பிரிவில் பிரதிப்பணிப்பாளராகச் சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தருக்கு நேர்முகப் பரீட்சையின்றி அந்நியமனம் வழங்கப்பட்டிருந்தது பணிப்பாளர் சபைத்தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட உரிய துறை என்பது நீக்கப்பட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் இடம்பெற்றிருந்ததுடன் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏற்றுமதி மேம்பாட்டு உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை உள்ளடக்கிய இன்னும் 10 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. ஏற்றுமதி மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு பதவியுயர்த்துவதற்காக நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சையில் மொழித்தேர்ச்சி மற்றும் விடய அறிவு ஆகிய இரண்டு பாடங்களிலிருந்து ஒரு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டு அப்பதவிக்கும் 09 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்த்துக் கொள்வதற்காக திருத்திய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. உதவிப் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் 2016 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 05 வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மற்றும் 04 உள்ளக விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். 03 பாடங்களை உள்ளடக்கிய இப் பரிட்சையில் ஆங்கிலப் பாடத்திற்காக வழங்கப்பட்ட நேரம் போதியதாக இல்லை எனக் குறிப்பிட்டு உள்ளக விணணப்பதார்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் ஆங்கிலப் பாடத்திற்கு மாத்திரம் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களித்தன்மையும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம், உரிய ஆண்டிற்காக நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு மற்றும் கொள்வனவுத் திட்டம் ஆகிய விடயங்கள் சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டிற்குமாக ஆரம்பிப்பதற்கும் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பாக்கப்பட்ட பௌதீக அளவு என்பன உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 செயல் நடவடிக்கைத்திட்டத்தில் ரூபா 3,100,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆனால் நிறைவேற்றப்படுதல் 2016 ஆம் ஆண்டிற்கு காலந்தாழ்த்தப்பட்ட 04 நிகழ்ச்சித் திட்டங்கள் அவதானிக்கப்பட்ட போதிலும் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 08 செலவுத் தலைப்புக்களின் கீழ் ரூபா 20,200,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்ட எனினும் அவ்வாண்டின் போது முழுமையாகப்பூர்த்தி செய்யமுடியாதிருந்த 11 நடவடிக்கைகள் தொடர்பாக எஞ்சியுள்ள வேலைகளை மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்ற ஆனால் அந்த ஆண்டின் போது முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த 07 நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டிற்கு முன் கொண்டுவரப்பட்டிருந்தன. எனினும் இதனை உறுதிப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத்திட்டம் 2017 யூன் 28 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 கொள்வனவு நடைமுறை

சபையினால் வருடாந்தம் நடாத்தப்படவேண்டிய ஜனாதிபதி ஏற்றுமதி பரிசளிப்பு விழா 2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போதும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக 2016 ஆம் ஆண்டின் போதும் நடாத்தப்பட்டிருந்தன. 2006 ஆம் ஆண்டிற்கான கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட கொள்வனவு நடைமுறைகளை மீறி இவ்விழாவிற்காக ரூபா 5,800,000 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் குறைந்த கிரயத்தின் கீழ் பிரபல்ய முகாமைத்துவக் கம்பனி ஒன்றைத் தெரிவு செய்யும் போது ஏற்பட்ட நட்டம் ரூபா 468,250 ஆகும்.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான ஒவ்வொரு செலவுத் துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டையும் உள்ளபடியான செலவுகளையும் ஒப்பீடு செய்த போது பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 6,519,000 செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, பழங்கள், காய்கறி, இலத்திரனும் இயந்திரங்களும், நிர்மாணங்களும் சுகாதார சேவைகளும், சந்தைப்படுத்தல்/வர்த்தக அபிவிருத்தி ICT/BMP ஆகிய செலவுத்துறைகளுக்கிடையே 11 சதவீதத்திலிருந்து 118 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1. ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் தோற்றுவிப்பதற்கு எதிர்பாக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவு ஆகிய இரண்டு வகைகளுக்குமாக எதிர்பாக்கப்பட்ட மூலதன மற்றும் வருமானப் பெறுமதிகளை உள்ளடக்கி வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் எதிர்பாக்கப்பட்ட செலவுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகரித்த பாதீடு உடனடியாக வரிசை அமைச்சு, பொதுத்திறைசேரி, அரசாங்க முயற்சிகள் திணைக்களம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்ற பாதீடு இன்றி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில்சுட்டிக்காட்டப்பட்ட ஆனால் போதிய கவனம் செலுத்தப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே தரப்படுகின்றன.

**2015 ஆம் ஆண்டு**

(அ) கிராமிய பொருளாதார புனர்வாழ்வு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையான கடன் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 மார்ச் 27 ஆம் திகதி போலந்தில் நடைபெற்ற வர்த்தக கூட்டத்திற்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் செலவுகளுக்காக வெளிவிவகார அமைச்சிற்குச் செலுத்தப்பட்ட பணத்தில் ரூபா 127,465 தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 23(I) ஆம் பிரிவிற்கு முரணாக நியமிக்கப்பட்ட சபையின் நிறைவேற்று பணிப்பாளருக்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 4,076,773 தொகையும் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயணத்திற்காக வழங்கப்பட்டிருந்த வாகனத்தின் வாடகையாக ரூபா 6,270,670 தொகையும் வெளிநாட்டுப் பயணத்திற்கான படிகள் மற்றும் பயணக்கட்டணமாக ரூபா 2,122,770 தொகையுமாக ரூபா 12,470,213 மொத்த தொகை முறையான அதிகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 யூன் 08 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக்குழுவின் கட்டளை மற்றும் திறைசேரியின் ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காது 2015 திசெம்பர் 31 வரை வாகன வாடகையாக ரூபா 11,703,560 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 2(1) மற்றும் 13(1),(2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் 1992 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான 23 ஆண்டு காலப்பகுதியின் போது ஏற்றுமதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக தேசிய அபிவிருத்தி சபை கூட்டப்பட்டிருக்காததுடன் ஏற்றுமதி அபிவிருத்தி நிதியம் தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எக்ஸ்போ மிலானோ வர்த்தகக் கண்காட்சிக்கு பங்குபற்றிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பிரதம மந்திரியின் அங்கீகாரத்தை மீறி நாட்டுக்கு வெளியே இருந்த காலத்திற்காக ரூபா 605,803 செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக கடந்த 4 ஆண்டுகளில் தொழில்சார் படிகளாக ரூபா 2,182,894 தொகையும் விசேட வாழ்வாதாரப் படிகளாக ரூபா 18,284,887 தொகையும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக ரூபா 12,458,798 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2015 மே 01 ஆந் திகதியிலிருந்து 2015 ஒக்தோபர் 31ஆந் திகதி வரை இத்தாலியிலுள்ள மிலானோவில் நடைபெற்ற எக்ஸ்போ மிலானோ கண்காட்சிக்காக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ரூபா 4,440,336 மேலதிகமாக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்ட எக்ஸ்போ ஆணையாளர் நாயகத்தின் செயற்பாட்டின் அடிப்படையில் இலங்கை இழந்துள்ள ரூபா 12,960,000 பணம் அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் ரூபா 5,040,000 பணம் எக்ஸ்போ இலங்கை தினத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தும் சபையின் தலைவரும் மேலதிக பணிப்பாளர் நாயகமும் அத்தினத்திற்காக பங்குபற்றுவதற்கு ரூபா 1,079,688 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) எக்ஸ்போ கண்காட்சிக்காக நியமிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர்களுக்கு 2015 மே 15 ஆந் திகதிய MF01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 04 (ட) பிரிவிற்கு முரணாக வெளிநாட்டு பயணப்படிகளுக்காக ரூபா 3,770,640 செலுத்தப்பட்டிருந்தது.

(ஓ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிக்கு முரணாக அங்கீகாரமின்றி ஒரு ஊழியர் கடன் நிதியத்தை தோற்றுவிப்பதற்கும் அதற்கு மாதாந்தம் 7.2 சதவீத வட்டியை செலவு வைப்பதற்கும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அரசாங்க மானியம் ரூபா 2,567,531 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் இனங்காணப்பட்ட நட்டம் ரூபா 1,918,314 தொகை சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2014 ஆம் ஆண்டு**

---------------------------------

(அ) தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபைக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தில் சபையின் ஒரு களஞ்சியம் பேணப்பட்டு வரும் வளவின் ஒரு பகுதி உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக உப குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அதிகாரம் மற்றும் நடவடிக்கைகளுக்கு முரணாக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 4,020,848 செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1979 இன் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 12(ட) பிரிவின் பிரகாரம் சபையினால் 1988 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 929,548,150 தொகையான முதலீட்டிற்காக நிதி அமைச்சிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் பாதகாப்புச் சேவையில் கடமையாற்றியதாக போலிக் கையொப்பமிட்டு பெற்று கொள்ளப்பட்ட ரூபா 226,530 சம்பளம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக சபைக்குச் சொந்தமான 5 வாகனங்களும் 04 உத்தியோகத்தர்களும் வரிசை அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது வாகன பராமரிப்புச் செலவு, பதவியினர் சம்பளம் மற்றும் படிகள் என்பனவாக ரூபா 2,824,256 சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தது.

**2013 ஆம் ஆண்டு**

-------------------------------

(அ) ஜாதிக சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்ட செயலகத்திற்கு செலுத்தவேண்டியதாக காட்டப்பட்டிருந்த ரூபா 1,009,740 தொகை அந்த அலுவலகத்தால் உறுதிப்படுத்தப்படாது முறையான அங்கீகாரமின்றி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாத்தின் 3.5 ஆம் பிரிவிற்கு முரணாக மோட்டார் சைக்கிள் கடன் மற்றும் இடர் கடன் வழங்கும் போது மாதாந்த கழித்தல்களின் மொத்த தொகையின் எல்லையானது மாதாந்த சம்பளத்தில் 50 சதவீதமாக கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(இ) இந்தியாவின் சென்னை நகரத்தில் 2004 இலிருந்து 2009 வரையான காலத்தின் போது சபையினால் பேணப்பட்டு வந்த இலங்கை வர்த்தக நிலையத்தில் 5 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை மற்றும் மின்சாரக்கட்டணம் ரூபா 7,049,858 தொகையானது 2016 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2012 ஆம் ஆண்டு**

(அ) ''ஹம்பாந்தோட்டை பட அத'' கைத்தொழில் நிகழ்ச்சித்திட்டத்தில் தோல் பொருள் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக ரூபா 1,000,000 முதலீடு செய்து தோற்றுவிக்கப்பட்ட தனியார் கம்பனியின் செயற்பாடுகளை ஆரம்பித்தல் கைவிடப்பட்டிருந்ததனால் முதலீடு செய்யப்பட்ட பணத்தை சபையினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | முதலீட்டுக் கட்டுப்பாடு | முறைப்படி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமையும் பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | கடன் கட்டுப்பாடு | ஏற்றுமதிக் கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் செய்து கொள்ளாமையும் கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | விசேட செயற்திட்டங்களின் கட்டுப்பாடு | சபையின் குறிக்கோள்களுக்கு முரணாக செயற்திட்டங்களை ஆரம்பித்தலும் இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளாது கைவிடல் |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு செய்யப்பட்ட விபரமான வருமானக்கூற்றும் பாதீடு செய்யப்பட்ட நிதி நிலைமைக்கூற்றும் சமர்ப்பிக்காமை |